**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியர்களுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டம்–2016–17 ஆம் நிதியாண்டு – திட்டத் தொடராணை மற்றும் ரூ.80.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1டி) எண். 12

நாள்: 14–02–2017
துன்முகி, மாசி 2,
திருவள்ளுவர் ஆண்டு 2048

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.52, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள்08–12–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.2973/சிபதி/ 2016, நாள் 15.07.2016 மற்றும் 30.09.2016.

---

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை, 2016–17 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.80.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், ஏனையவற்றுடன், பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை, 2016–17 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.80.46 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு, ஏற்று, பார்வையற்ற மாணவ, மாணவிகளுக்கு வாசிப்பாளர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை, 2016–17 ஆம் நிதியாண்டில் தொடர, திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென ரூ.80.46 இலட்சம் (ரூபாய் எண்பது இலட்சத்து நாற்பத்தாறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

“2235–சமூக பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–I திட்டத்தில் சேராதது BB மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள்–12 படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும்– 09– ஏனையவை”
(து.தொ.கு 2235–02–101–BB–1290)

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.4419/நிதி(சந)/2017, நாள் 08.02.2017ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள்நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.தி.ந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.